பக்கங்கள் 16+4

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

## ரயில் சாரதிகள் பணிப்பகிஷ்ப்பு

### பயணிகள் பெரும் சிரமம்

ரயில் சாரதிகளின் பணிப்புறக் கணிப்பு காரணமாக பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள் ளனர்.

04

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 வைகாசி 25 வெள்ளிக்கிழமை 07.05.2024 அதிர்வு 312



# தேர்தலுக்கு அஞ்சுவோர் ராஜபக்ஷக்கள் அல்லர்!

## ரணில் தவறு இழைக்கமாட்டார் என்று மஹிந்த நம்பிக்கை



"எந்தத் தேர்தலுக்கும் ராஜபக்ஷக்கள் பயப்படு பவர்கள் அல்லர். நான் ஜனாதிபதியாக இருந்த வேளை தேர்தல்களை உரிய காலத்தில் நடத்தி னேன். தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வும் உரிய காலத்தில் தேர்தல்களை நடத்த வேண் டும். அவர் தவறு இழைக்கமாட்டார் என்று நம்பு கின்றேன்."

- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவருமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

'ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன் றத் தேர்தலைப் பிற்போடும் ஐக்கிய தேசியக் கட்சி யின் யோசனைக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆதரவு வழங்குமா?'

04

# மொட்டுவுடனான உறவைத் துண்டித்தால் கூட்டணி அமைப்பது குறித்து பேசத் தயார்

## ஐ.தே.கவிடம் சஜித் அணி தெரிவிப்பு

"ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியுடனான உறவை முறித்துக்கொண்டால் ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணி அமைப்பது தொடர்பில் பேச்சு நடத்தலாம்."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தி யின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

"எம்மை இணைத்துக்கொள்வ தற்குரிய தேவைப்பாடு ரணில் விக்கி ரமசிங்கவுக்கு இருக்கலாம்.

04





# வாதரவத்தையில் இந்திய அமைதிப் படையால் படுகொலை செய்யப்பட்டோரின் நினைவேந்தல்






இந்திய அமைதிப் படையினரால் படுகொலை செய்யப்பட்டவர்களின் 35ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழ். புத்தூர் – வாதரவத்தையில் நேற்று நடைபெற்றது.

உயிரிழந்தவர்களின் உறவுகளால் படுகொலை செய்யப்பட்ட இடத்தில் தீபங்கள் ஏற்றப்பட்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டு நினைவேந்தல் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

1989ஆம் ஆண்டு வாதரவத்தையில் இந்திய அமைதிப் படையினரால் ஒன்பது பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். அவர்களின் நினைவாகவே நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்திய வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் அனந்தி சசிதரன் அஞ்சலியின் பின் கருத்துத் தெரிவிக்கையில்,

”இந்திய அமைதிப் படை என்ற பெயரில் இலங்கைக்கு வந்த இந்திய இராணுவம் பல்வேறு இடங்களில் பொதுமக்களைப் படுகொலை செய்திருந்தது. ஆனால், இவ்வாறான படுகொலைக்கு இன்று வரையும் இந்திய அரசு எவ்வித மன்னிப்பும் கோரவில்லை.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவரை நீதியும் வழங்கப்படவில்லை. தமிழ் மக்களாகிய நாம் இன்றும் ஏதிலிகளாகவே இருந்து வருகின்றோம்.


படுகொலை செய்யப்பட்டவர்களுக்காக அமைக்கப்பட்ட நினைவுத் தூபி போரின் பின் கடந்த 2012ஆம் ஆண்டளவில் இராணுவத்தினரால் உடைக்கப்பட்டது. அந்த நினைவுத் தூபியை விரைவில் அமைத்து அவர்களை நினைவுகூருவதற்கு வழி செய்ய வேண்டும்.” – என்றார்.

# வீட்டில் தனியாக வசித்து வந்த பெண் ஒருவர் வெட்டிக்கொலை

வீட்டில் தனியாக வசித்து வந்த பெண் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் மாவத்தகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிலெஸ்ஸ பகுதியில் நேற்று இரவு இடம்பெற்றுள்ளது.

62 வயதுடைய இந்தப் பெண் வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு வந்து தனியாக வசித்து வந்துள்ளார் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது .




இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மரண அறிவித்தல்

தோற்றம்
22 - 12 - 1944



மறைவு
06 - 06 - 2024

# முத்துகண்ணு செல்வராஜா தேவர்

இறக்வானயைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமகவும் கொண்ட திரு. M. செல்வராஜா தேவர் அவர்கள் 6.6.2024 வியாழக்கிழமையன்று சிவப்பத மடைந்தார்.

அன்னார் (late.)முத்துக்கண்ணு தேவர் (late.) பாலாமணி அம்மாளின் அன்பு புதல்வனும், (late.) தனலட்சுமியின் அன்பு கணவரும், கருணாகரன், சுபதர்ஷினி, தனராஜ் ஆகியோரின் அன்பு தந்தையும், சிவராஜா, ராஜபிரஷாந்தினி, மாள விகா ஆகியோரின் மாமனாரும் Harithra, Akshayan, Yaatharsh ஆகியோரின் தாத்தாவும், (late) வெள்ளதாயி, (late) பால்சாமி தேவர், தேவராஜா தேவர், (late) சகுந்தலாதேவி, சந்திரமோகன் தேவர், பாக்கியலக்ஷ்மி, இந்திராணி, (late) ராசாதேவி, ராசாதேவன் தேவர், பவளராணி, செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் சனிக்கிழமை (8.6.2024) 7.30 மணி முதல் LANKA FLORISTS (Punchi Borella) வைக்கப்பட்டு 9.6.2024 ஞாயிற்றுக்கிழமை 12 மணியளவில் இறுதி கிரியைகள் நடைபெறும். பின்னர் அவரின் பூதவுடல் 2 மணியளவில் Borella பொது மயானத்திற்கு எடுத்துசெல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
**கருணாகரன் (கண்ணா),**
**சுபதர்ஷினி (சுபா), தனராஜ்**
0773242032

# தமிழ், முஸ்லிம் கட்சிகளின் ஆதரவு சஜித்துக்கே!



## ஐக்கிய மக்கள் சக்தி நம்பிக்கை

"தமிழ், முஸ்லிம் கட்சிகளின் ஆதரவு சஜித் பிரேமதாஸவுக்கே. வெகுவிரைவில் மெகா கூட்டணி மலரும்."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

"ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்படுவதற்குப் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்வந்துள்ளனர். இவர்களில் கள்ளவர்கள் அற்றவர்களை நாம் இணைத்துக் கொள்வோம்.

இந்த நாட்டில் உள்ள தமிழ், முஸ்லிம் கட்சிகளின் ஆதரவு சஜித்துக்கே. பல சிங்களக் கட்சிகளும் சஜித்துக்கே ஆதரவு. எனவே, இவை அனைத்தும் இணைந்து பலமான அணி உருவாகும்.

இன்னும் மூன்று பூரணை (போயா) தினங்கள் முடிந்த பின்னர் சஜித் பிரேமதாஸவே ஜனாதிபதியாக இருப்பார். இது உறுதி." – என்றார்.

# இரண்டு வாகனங்கள் தீக்கிரை!

(நாவலப்பிட்டி நிருபர்)

நாவலப்பிட்டி, குறுந்துவத்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொலஸ்பாகை , மீனகொல்ல பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு வாகனங்கள் தீக்கிரையாகியுள்ளன.

வீடொன்றுக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றும், வான் ஒன்றுமே இவ்வாறு தீக்கிரையாகியுள்ளன.

இன்று அதிகாலை 3 மணியளவில் இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது. தீ எவ்வாறு ஏற்பட்டது என்பது தொடர்பில் இன்னும் கண்டறியப்படவில்லை.

மேலதிக விசாரணைகளை குருந்துவத்த பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**தேர்தலுக்கு...**

என்ற கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தேர்தல்களைப் பிற்போட நாம் அனுமதிக்கமாட்டோம். குறிப்பாக பிரதான தேர்தல்களை உரிய காலத்தில் நடத்தியே தீர வேண்டும். எமது நிலைப்பாட்டில் மாற்றம் எதுவும் இல்லை. ஜனாதிபதியிடம் இதனைத் தெரிவித்துள்ளோம்.

இவ்வருடம் ஜனாதிபதித் தேர்தல் நடந்தே ஆக வேண்டும். மொட்டுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் விரைவில் வெளிப்படுவார்." – என்றார்.

**மொட்டுவுடனான...**

ஆனால், ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையும் திட்டம் எமக்கு இல்லை. நாட்டில் பிரதான அரசியல் கட்சி ஐக்கிய மக்கள் சக்தியாகும். எனவே, ஐக்கிய தேசியக் கட்சியுடன் பயணிக்கும் எந்த தேவைப்பாடும் எமக்குக் கிடையாது.

ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவம் தொடர்பில் இருந்த பிரச்சினை காரணமாகவே வெளியேறி நாம் சஜித் பிரேமதாஸ தலைமையில் தனிக்கட்சி அமைத்தோம். வெற்றியை நோக்கி எமது கட்சி பயணித்துக்கொண்டிருக்கின்றது. எம்முடன் கூட்டணி அமைப்பதற்கு பல கட்சிகளும் முன்வந்துள்ளன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியுடனான உறவை முறித்துக் கொண்டு சஜித் பிரேமதாஸ தலைமையில் இணைந்து செயற்பட ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் முன்வந்தால் அது பற்றி பேச்சு நடத்தலாம்." – என்றார்.

**ரயில் சாரதிகள்...**

இந்தப் பணிப்புறக்கணிப்பால் இன்று காலை மாத்திரம் 32 ரயில் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என்று ரயில் திணைக்களத்தின் உயர் அதிகாரி தெரிவித்தார்.

இன்று மாலையில் இரத்துச் செய்யப்பட்ட ரயில்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்றும் அந்த அதிகாரி கூறினார்.

பல கோரிக்கைகளை முன்வைத்து ரயில் என்சின் சாரதிகள் நேற்று நள்ளிரவு முதல் வேலைநிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இரண்டாம் வகுப்பு பதவி உயர்வு வழங்குவதில் ஏற்பட்ட தாமதம், ஆட்சேர்ப்பு தாமதம் உள்ளிட்ட பல பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு இந்தத் தொழில் நடவடிக்கையில் அவர்கள் இறங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

5 ரயில் நிலையங்களில் இரண்டின் சாரதிகள் மாத்திரமே பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டுள்ளனர் எனவும், இதன் காரணமாக மின்சார ரயில் இயங்காது எனவும் லோகோமோட்டிவ் ஒப்பரேட்டிங் பொறியியலாளர்கள் சங்கத்தின் செயலாளர் சேனாநாயக்க தெரிவித்தார்.

# அரசியல் செல்வாக்கைக் கொண்டு சீரழிக்கப்படுகிறது கல்வி, நிர்வாகம்!

## விசனம் தெரிவிக்கிறார் கலையரசன் எம்.பி.

(ந.லோகதயாளன்)

சில அரசியல்வாதிகள் இந்த நாட்டில் அரசியல் ரீதியான செல்வாக்கைப் பயன்படுத்தி குறிப்பிட்ட இடங்களிலே கல்வி மற்றும் பிரதேச நிர்வாகம் போன்றவற்றைச் சீரழித்து வருகின்றனர்.

இதற்கு உதாரணம் அம்பாறை மாவட்ட தமிழ் கல்வி வலயங்களும், கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயமும் தான்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற கல்வியில் இருக்கும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து சிறந்த கல்வியை வழங்க வேண்டும் என்ற ஒத்திவைப்புப் பிரேரணை மீதான உரையின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு,

நாடாக இருக்கலாம் பிரதேசமாக இருக்கலாம் எதுவாக இருப்பினும் கல்வியால் மாத்திரமே அவற்றின் முன்னேற்றத்தை அடைய முடியும் என்பது எங்கள் எல்லோரது கருத்தாகும். அந்த அடிப்படையில் கல்வியை மேம்படுத்த வேண்டியது அனைவரதும் கடமையாகும். ஆனால் எமது நாட்டில் கல்வியில் அரசியல் அதிகளவிலான ஆதிக்கத்தைச் செலுத்துகின்றது. நான் அதன் பாதிப்பை உணர்ந்தவன் என்ற ரீதியில் இந்த விடயத்தைச் சொல்லுகின்றேன்.

குறிப்பாக எமது அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறைப் பிரதேசத்துக்கு அண்டியுள்ள எல்லைக் கிராமத்தில் இருப்பவன். கடந்த கால யுத்தத்தில் அதிகளவிலான பாதிக்கப்பட்ட பிரதேசமாகவும் இது இருக்கின்றது.

அந்த அடிப்படையில்தான் கடந்த 03 ஆம் திகதி சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் நியமனம் வழங்கப்பட்டது. இங்கு 71 பாடசாலைகள் இருக்கின்றன. அதில் 27 பாடசாலைகள் தமிழ் பாடசாலைகளாகவும், 44 முஸ்லீம் பாடசாலைகளாகவும் இருக்கின்றன. கிழக்கு மாகாணம் முறையாக அதற்கு ஒரு வலயக் கல்விப் பணிப்பாளரை நியமிக்க வேண்டும் என்ற அடிப்படையில் பொருத்தமான ஒருவரை நியமனம் செய்திருந்தது. ஆனால் அவர் தமிழராக இருந்த ஒரே காரணத்தால், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் சென்று அவருக்கு எதிர்ப்புக் காட்டியதன் பேரில் அங்கு ஒரு மோசமான சூழல் நிலவியது.

உண்மையிலே இந்த நாட்டின் கல்வியைச் சீரழிப்பதற்கு அரசியல் பயன்படுத்தப்படுகின்றது என்பதற்கான உதாரணங்களில் ஒன்றாக இதனையும் எடுத்துக் கொள்ளலாம். இந்த அடிப்படையில்தான் நாங்கள் கடந்த காலங்களில் கல்வி அமைச்சரையும், இராஜாங்க அமைச்சரையும் சந்தித்து எங்களுக்கு ஒரு தனியான கல்வி வலயம் வேண்டும் என்பதை கூறியிருந்தோம். ஏனெனில் இந்த நியமன விடயம் மாத்திரமல்ல கடந்த காலங்களில் வழங்கப்பட்ட வளங்கள் கூட எமது பாடசாலைகளைப் புறந்தள்ளியே வழங்கப்பட்டிருக்கின்றன.



குறிப்பாக இந்த நாட்டில்அரசில் ரீதியான செல்வாக்கைப் பயன்படுத்தி அரசியல்வாதிகள் குறிப்பிட்ட இடங்களிலே கல்வியைச் சீரழித்திருக்கின்றார்கள் என்பதை அனைவரும் விளங்கிக் கொள்ள வேண்டும். யுத்தத்தில் பாதிக்கப்பட்ட தமிழ்க் கிராமங்கள் கல்வியில் படிப்படியான வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கின்ற இந்தக் காலகட்டத்தில் தடைகள் பல ஏற்படுகின்றன.

வளப்பகிர்வு தொடர்பில் இங்கு பேசப்பட்டது. உண்மையிலே சில பாடசாலைகளில் இன்று வரைக்கும் கணிதம். விஞ்ஞானம், ஆங்கிலம் ஆசிரியர்கள் நியமனம் இல்லாத நிலைமைகள் இருக்கின்றன. எமது பிள்ளைகள் நகர்ப் புறங்களுக்குச் சென்றுதான் தங்கள் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய சூழல் இருக்கின்றன. ஆனால் தற்போது படிப்படியான வளர்ச்சியின் மூலம் எமது பிரதேசங்களிலும் அந்தக் கல்வியைப் பெற்றுக் கொள்ளக் கூடிய மாற்றங்களும் சிறய அளிவில் ஏற்பட்டுள்ளன. இந்த நிலைமை இன்னும் அதிகரிக்கப்பட்டு எமது பிரதேசங்களுக்கு வளங்கள் சரியான முறையில் பகிரப்பட்டு கல்வி நிலை உயர்த்தப்பட வேண்டும் என்பதைக் கல்வி அமைச்சரிடம் நான் கேட்டுக் கொள்கின்றேன்.

கல்வியில் மாத்திரமல்ல எமது பிரதேசங்கள் நிர்வாக ரீதியிலும் முடக்கப்பட்டே வருகின்றன. கல்முனை வடக்கு பிரதேச மக்கள் இன்று 70 நாள்களாகச் சூழற்சி முறையிலான உண்ணாவிரதத்தை மேற்கொண்டு வருகின்றார்கள். இந்த நாட்டில் இருக்கின்ற பொது நிர்வாகம் தங்களுக்கு அநீதியை விளைவிக்கின்றது என்ற காரணத்தால் பாதிப்புறுகின்ற அப்பிரதேச மக்கள் தாங்களாக முன்வந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்திருக்கின்றார்கள். ஆனால் பொது நிர்வாகத்துக்குப் பொறுப்பான அமைச்சரோ, அமைச்சின் செயலாளரோ இந்த விடயத்தில் பாராமுகமாக இருந்து கொண்டிருக்கின்றனர்.

முஸ்லீம் அரசியல்வாதிகள், தமிழ் அரசியல்வாதிகள் கல்முனை வடக்கு விளக்கம் தெரியாமல் பேசிக்கொண்டிருக்கின்றார்கள் என்று இந்த சபையிலே தெரிவிக்கின்றார்கள். இது தொடர்பில் வேதனையுடன் ஒரு விடயத்தை நான் கூறிவைக்க விரும்புகின்றேன்.

கல்முனை 1சி என்கின்ற கிராம சேவையாளர் பிரிவை ஊடறுத்துச் செல்லும் கழிவு நீர் வழிந்தோடும் பகுதியைத் தனிநபர் வழிமறித்து அந்த அரச காணியை மண் இட்டு நிரப்புகின்ற நிலைமை இருக்கின்றது. இது தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநர், நில அளவைத் திணைக்களம் போன்றவற்றுக்குத் தெரிவித்து, அவற்றினூடாக அறிக்கையும் பெறப்பட்டிருக்கின்றது.

மாகாணசபை இதனைக் கள ஆய்வு செய்து இது கழிவு நீர் வழிந்தோடும் இடம் எனவும் சட்டவிரோதமாக இங்கு தடுப்புச் சுவர் கட்டப்பட்டிருப்பதாகவும் அறிக்கை சமர்ப்பித்துள்ளது. அதே போன்று நில அளவைத் திணைக்களமும் இது அரசுக்குச் சொந்தமான காணி என்ற ஆவணங்களையும் தந்திருக்கின்றார்கள். அது மட்டுமல்லாமல் அப்பிரதேச கிராம அபிவிருத்திச் சங்கம் நீதிமன்ற நடவடிக்கைகைகளையும் மேற்கொண்டிருக்கின்றன. ஆனால் இவ்வாறு இந்தப் பிரச்சினை சென்று கொண்டிருக்கின்ற நிலையிலும், கல்முனை மாநகரசபைக்குச் சொந்தமான வாகனங்களைப் பயன்படுத்தி தொடர்ந்தும் அந்த இடத்தை மண் இட்டு நிரப்பும் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டே வருகின்றது.

இவ்வாறு தொடர்ச்சியாகக் கல்முனை வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் தமிழர்களின் பூர்வீக நிலங்களை ஆக்கிரமிக்கும் செயற்பாடு நடந்து கொண்டிருக்கின்றது. இது தொடர்பில் பொது நிர்வாக அமைச்சரிடம் நேரடியாக களவிஜயம் ஒன்றை மேற்கொள்ளுமாறு கேட்டிருந்தேன். அதுவும் நடைபெறவில்லை. அம்பாறை மாவட்ட செயலாளரும் கூட இது தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. நீதிமன்றத்தில் இந்த விடயம் இருக்கின்ற போதும் கூட கல்முனை மாநகர ஆணையாளரால் மாநகரசபை வாகனங்களைப் பயன்படுத்தி இந்த மண் இட்டு நிரப்பும் வேலை திட்டம் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இது மிகவும் மோசமான ஊழலாகும்.- என்றார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ரணிலின் முயற்சி

வரப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் தாம் நேரடியாகக் களமிறங்குவார் என்பதை இன்னும் - இதுவரை - அறிவிக்காத ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்தத் தேர்தலில் குதிப்பதற்கான தமது பக்க சைகைகளைக் காட்டத் தொடங்கி விட்டார்.

இன்னும் மூன்றரை முதல் நான்கரை மாதங்களுக்குள் ஜனாதிபதி தேர்தல் நடந்து முடிந்து விடும். அரசமைப்பு ஏற்பாடுகளின்படி அதுதான் ஒழுங்கு.

தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க இறங்குவார் என்று அவரது தரப்பில் அறிவிக்கப்பட்டாலும், ரணில் விக்கிரமசிங்கவோ இது விடயத்தில் நழுவல் - வழுவல் போக்காகவே இருந்து வருகிறார். தேர்தலில் தாம் இறங்குவது பற்றிய உத்தியோகபூர்வ அறிவிப்பை இவ்வளவு நாள் பிந்தியும் அவர் வெளியிடவில்லை. கடைசி நேரம் வரை அவர் இழுத்தடித்து வருகிறார்.

அதற்கு காரணம் உண்டு. யாரோடு - எந்தத் தரப்போடு - அணி சேர்ந்து, தேர்தலில் நிற்பது என்ற குழப்பம்தான் அந்தக் காரணம்.

'ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம், இறங்கச் சொன்னால் முடவனுக்கு கோபம்' என்ற மாதிரி இழுபறி நிலைமை.

இயன்றவரைஎல்லாத்தரப்புக்களையும் - எல்லா அணிகளையும் - அரவணைத்துப் போனால் மட்டுமே தமக்கு வெற்றி நிச்சயம் என்று கருதும் ரணில் விக்கிரமசிங்க, எல்லாத் தரப்புக்களையும் இணங்கச் செய்வதற்கான தந்திரோபாயத்துக்காகக் கடைசி வரைக் காத்திருக்கின்றார்.

பௌத்த - சிங்களத் தீவிரப் போக்கு கொண்ட மொட்டுக் கட்சியின் ஆதரவில்தான் ஜனாதிபதிப் பதவியைப் பெற்று, அத்தரப்பின் ஆதரவுடன்தான் அவர் தமது அரசை இப்போது கொண்டிழுக்கிறார்.

அந்த மொட்டுத் தரப்பின் வேட்பாளராகக் களமிறங்கினால் தமிழர் மற்றும் முஸ்லிம்கள் ஆகிய சிறுபான்மையினரின் வாக்குகள் தமக்கு இல்லாமல் போய் விடும் என்பது அவருக்கு நன்கு தெரியும். ஆயினும், அதற்காக மொட்டுக் கட்சியின் ஆதரவை இழந்து விடவும் அவர் தயாரில்லை.

தான் கட்சி சாராத பொது வேட்பாளராகக் களமிறங்க, மொட்டுக் கட்சி மற்றும் சிறுபான்மையினர் தரப்புக்கள் எல்லாம் தமது கூட்டுக்குள் வராமல், வெளியில் இருந்தபடி, தமக்கு இந்த ஜனாதிபதி தேர்தலில் முழு ஆதரவு தந்து, தம்மை வெல்ல வைக்க வேண்டும் என்று ரணில் விக்கிரமசிங்க எதிர்பார்க்கின்றார்.

ஆனால் அது சுலபமான விடயம் அல்ல.

கொழும்பில் தமக்கென - ரணில் விக்கிரமசிங்கவுக்கென - தனியான அரசியல் அலுவலகம் ஒன்றை அவர் ஆரம்பித்தமையின் பின்புலம் இதுதான்.

அவரது ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தனியான அலுவலகம் கொழும்பில் - ஸ்ரீகொத்தாவில் - உள்ளது. அது இருக்கத் தக்கதாக, தனியான - பிறிதான - ஓர் அரசியல் அலுவலகத்தை அவர் ஆரம்பித்திருக்கும் அரசியல் நகர்வுக்குப் பின்னால் பொதிந்திருக்கும் அம்சம் இதுதான்.

தாம் தமது ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராகத் தன்னும் இந்தத் தேர்தலில் களமிறங்கப் போவதில்லை, பல தரப்புக்களும் வெளியில் இருந்து ஆதரவு தர, அத்தரப்புக்கள் அனைத்தினதும் பொது வேட்பாளராகவே களமிறங்குவேன் என்ற ரணிலின் திட்டம்தான் இப்போதும் முன்நகருகின்றது.

ரணில் விக்கிரமசிங்க கொழும்பில் தமக்கெனத் திறந்துள்ள புதிய அரசியல் அலுவலகம் ரணிலை, வரும் ஜனாதிபதித் தேர்தலில் பல தரப்புகளின் சார்பான பொது வேட்பாளராகக் களம் இறக்கும் திட்டத்தின் ஆரம்பக் கட்ட நகர்வுதான்.

ஏற்கனவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க - எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோருக்கு இடையில் இந்தத் தேர்தலை ஒட்டி சமரச இணக்கப்பாடு ஒன்றை உருவாக்க பக்கத்து நாட்டு இராஜதந்திரம் சிங்கப்பூரில் முன்னெடுத்த முயற்சி பலன் தரவே இல்லை, தோற்றுப் போய்விட்டது என்ற பின்புலத்திலேயே தமது தனித்துவமான புதிய அரசியல் அலுவலகத் திறப்புடன் காய் நகர்த்தலை ஆரம்பித்திருக்கின்றார் ரணில் விக்கிரமசிங்க.

எல்லாத் தரப்புக்களையும் தமக்கு ஆதரவாக தேடி நிறுத்தும் ரணில் விக்கிரமசிங்கவின் முயற்சி வெற்றி பெறுமா? அடுத்து வரும் வாரங்களில் முடிவு தெரிய வரும்.





# மாணவர்கள் பங்குபற்றிய யோகா தின நிகழ்வுகள்

(வாஸ் கூஞ்ஞ)

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் (05) யோகா தின நிகழ்வு நடைபெற்றன.

இந்த நிகழ்வில் கொன்சல் ஜெனரல் ஸ்ரீசாய் முரளி பிரதம அதிதியாகவும், ஊர்வாகத்துறை பிரதேச செயலாளர் மஞ்சுளாதேவி, மாவட்ட சலாச்சார உத்தியோகத்தர் கிருஷ்ணகுமார், பிரதேச சபை அலுவலக அதிகாரிகள் மற்றும் பொது மக்கள் கலந்துகொண்டனர்.

நிகழ்வின் தொடக்கத்தின் போது கொன்சல் ஜெனரல் ஸ்ரீ சாய் முரளி ஊர்காவற்றுறையில் முதன்முறையாக யோகா நிகழ்வை ஏற்பாடு செய்ததன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

யோகாவுக்கு அப்பால் கலாச்சார ஆதரவை விரிவுபடுத்துவதில் தூதரகத்தின் உறுதிப்பாட்டை அவர் வலியுறுத்தினார். நிகழ்வு ஏற்பாடுகளை இலகுபடுத்திய பிரதேச செயலாளருக்கு கொன்சல் ஜெனரல் நன்றி தெரிவித்தார்.

பிரதேச செயலாளர் மஞ்சுளா தேவி தனது உரையில் யோகாவின் பல நன்மைகளைக் கோடிட்டுக் காட்டியதுடன் யோகாவை சர்வதேச மயமாக்குவதற்கும் ஜூன் 21 ஆம் திகதியை உலக யோகா தினமாக நிறுவுவதற்கும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் முயற்சிகளுக்கு நன்றி தெரிவித்தார்.

மாவட்ட கலாச்சார அலுவலர் கிருஷ்ணகுமார் கலந்து கொண்டு யோகா பயிற்சி செய்வதால் ஏற்படும் ஆன்மீக மற்றும் மன நலன்கள் குறித்துப் பேசினார். நிகழ்ச்சியில் மாவட்ட கலாச்சார அலுவலர் கிருஷ்ணகுமார் நடத்திய யோகா செயல் விளக்கம் இடம்பெற்றது. இதில் 15 வயதுக்கு உட்பட்ட மூன்று பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 60 மாண வர்கள் பங்கேற்றனர்.

யோகாவில் தங்களின் அர்ப்பணிப்பு மற்றும் ஆர்வத்தை வெளிப்படுத்தும் வகையில் பல்வேறு ஆசனங்களை மாணவர்கள் சிறப்பாகச் செய்து காட்டினர்.





# உயர்தரத்தில் சித்திபெற்ற மாணவர்கள் கௌரவிப்பு

(எம்.எம்.றம்ஸீன்)

பாலமுனை அல் ஹிதாயா மகளிர் கல்லூரியில் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு கல்லூரியில் அதிபர் பி. முஹா ஜரின் தலைமையில் நடைபெற் றது.

சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவிகள் மாலை அணிவிக்கப்பட்டு வாழ்த்தி வரவேற்கப்பட்டனர்.

நிகழ்வில் அதிபர், பிரதி அதிபர், உதவி அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இந்த முறை 11 மாணவிகள் பரீட்சைக் குத் தோற்றி அனைத்து மாணவிகளும் 100 வீத சித்தி பெற்றுள்ளனர். கடந்த வருடமும் இவ்வாறு நூறு வீத சித்தியை இப் பாடசாலை பெற்றிருந்ததமை குறிப் பிடத்தக்கது.

இந்த முறை 7 மாணவிகள் பல்க லைக் கழகத்துக்கு நுழையும் சந்தர்ப் பத்தை பெறுவர் என்றும் அதிபர் தெரி வித்தார்.

# தென்புலோலியூர் மஹாகும்பாபிஷேகம்

தென்புலோலி காந்தியூர் கோட்டத்துறை அருள்மிகு பத்திரகாளி சமேத வேம்படி வீரபத்திரர் ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன பஞ்சகுண்ட பக்ஷ மஹாகும்பாபிஷேகம் நாளை மறுதினம் (09) ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

காலை 7. 15 மணி முதல் 8. 15 மணிவரையான சுப வேளையில் நடைபெறவுள்ளது.

இதற்கான கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை காலை 5. 15 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

நாளை 8 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிவரை எண்ணெய்க்காப்புச் சாத்துதல் இடம்பெறும்.நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை விசேட யாக பூஜை நடைபெற்று காலை 7. 15 மணிக்கு தூபி அபிஷேகம் இடம்பெற்று காலை 8. 15 மணிக்கு மஹாகும்பாபிஷேகம் நடைபெறும்.

கும்பாபிஷேகத்தை ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சு. வித்தியாபரக்குருக்களின் அனுசரணையுடன் வியாபாரிமூலை இன்பர்சிட்டி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பிரதமகுரு சைவப் புலவர் சிவஸ்ரீ இரத்தினதுரை திருமாறக்குருக்கள் பிரதம குருக்களாக இருந்து நடத்தவுள்ளார்.

# மனித பாவனைக்குப் பொருத்தமற்ற குடிபானங்கள் சந்தையில் விற்பனை!

**மக்களை உஷாராக இருக்குமாறு சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அர்சாத் காரியப்பர் தெரிவிப்பு**

(நூருல் ஹுதா உமர்)

மனித பாவனைக்குப் பொருத்தமற்ற பழச்சாறு மற்றும் குளிர்பானங்கள் சந்தையில் விற்பனைக்கு வந்துள்ளன. எனவெ குளிர்பான கொள்வனவில் பொது மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்று சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜே. கே.எம். அர்சாத் காரியப்பர் பொது மக் களை கேட்டுள்ளார்.

அண்மைக் காலமாக சாய்ந்தமருது பிரதேசத்தில் உணவுகள் சார்ந்து எடுக் கப்படும் நடவடிக்கைகளில் அரச பகுப் பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப் பப்படும் உணவு மாதிரிகளில் மனித பாவனைகளுக்கு பொருத்தமில்லாத பொருள்களை மக்கள் மயப்படுத்த வேண்டிய தார்மீக கடமை எனக்குள்ளது.

அதனால் ஏற்படும் சுகாதார பிரச்சி னைகள் பாரியளவு உள்ளன. இதனால் அதிகமாக சிறு குழந்தைகள் சிறுநீரக



நோய், புற்றுநோய் போன்றவற்றால் பாதிப்படைகின்றனர். எனது தலை மையிலான குழு கடந்த உணவு சுற்றி வளைப்பின் போது கைப்பற்றிய குடிபான மாதிரி பகுப்பாய்வுக்கு அனுப் பப்பட்டது.

பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்ட அந்த மாதிரி குடிபானம் மனித பாவனைக்குப் பொருத்தமற்றது. அது அதிகமான சல்பர் கந்தகத்தை கொண்டுள்ளது. அதிக கந்தகம் பாரிய நோய்களை ஏற்படுத்தும். இது மாதிரியான குடிபா னங்கள் திருமண மண்டபங்களில் அதிகம் பாவனையில் உள்ளன. அதிக லாபம் பெறுவதற்காக கடைகளிலும் இவ்வகை குடிபானங்கள் விற்கப்ப டுகின்றன. இவ்வகை குடிபானங்கள் விற்கப்படுவது தெரியவந்தால் உடனடி யாக பறிமுதல் செய்யப்படும் என்று தெரிவித்துள்ளார்.

இது மக்களுக்கான விழிப்புணர்வு அறிவித்தல். இவ்வாறான உணவு தயாரிப்பு, விற்பனை நிலையங்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கைகள் தொடரும். மேலும் இது தொடர்பிலான முழு விவரங்கள் மற்றும் சுகாதார ஆலோசனைகளைப் பெற அலுவலக நேரங்களில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தை நாடுமாறும் கேட்டுக்கொண்டுள்ளார் என்று மேலும் தெரிவித்துள்ளார்.



# கல்முனை சுகாதார பணிமனையில் உலக சுற்றாடல் தினத்தில் மரநடுகை

(அஸ்ஹர் இப்றாஹிம், நியாஸ் ஆதம்)

உலக சுற்றாடல் தினம் மற்றும் தேசிய சுற்றாடல் வாரத்தை முன்னிட்டுக் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் ஏற்பாடு செய்யப்பட்ட மர நடுகையும் சிரமதான நிகழ்வும் நேற்று முன்தினம் (05) இடம்பெற்றன.

பிராந்திய சுற்றுச்சூழல் தொழில்சார் சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எஸ்.எம்.பௌசாத் ஒருங்கிணைப்பில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் திருமதி சகீலா இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிராந்திய பிரிவுத் தலைவர்கள், பணிமனையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் பலரும் கலந்துகொண்டனர்.



இதன்போது பிராந்திய பணிமனை வளாகம் சிரமதானம் செய்யப்பட்டதுடன் மர நடுகையும் இடம்பெற்றது.



# அட்டாளைச்சேனை பிரதேசத்தில் சகவாழ்வு சங்க ஆரம்ப நிகழ்வு

(எம்.எம்.றம்ஸீன்)

நீதி அமைச்சின் தேசிய ஒருமைப்பாட்டு பிரிவால் கிராமங்கள் தோறும் சகவாழ்வுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பீ.ரீ.எம்.இர்பான் வழிகாட்டலில் உதவிப் பிரதேச செயலாளர் எப்.நஹீஜா முஷாபிர் (சட்டத்தரணி) தலைமையில் தேசிய ஒருமைப்பாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம்.எம்.றிஸானின் நெறிப்படுத்தலில் அட்டாளைச்சேனை 13 ஆம் பிரிவுக்கான சகவாழ்வுச்சங்க ஆரம்ப நிகழ்வு இடம்பெற்று நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் அட்டாளைச்சேனை – 13 கிராம சேவகர் யூ.எல்.சம்சுதீன், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆஷிகா, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெசிமா, வெளிக்கள உத்தியோகத்தர்களான ஜெஸீலா நஸ்ரின், ஏ.எம்.ஹஸ்பியா வீவி, உளவளத் துணை உதவியாளர் றனீஸ், மகளிர் அபிவிருத்தி கள உதவியாளர் பர்ஹானா மற்றும் பிரிவின் பொது மக்கள் போன்றோர் பங்கேற்றனர்.

எதிர்காலத்தில் 32 கிராம சேவகர் பிரிவுகளையும் ஒன்றிணைத்து பிரதேச சகவாழ்வு சங்கம் உருவாக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ஆளுமை விருத்தி தொடர்பில் இளைஞருக்குச் செயலமர்வு!

(எஸ்.கீதபொன்கலன்)

அகம் மனிதாபிமான வள நிறுவனத்தின் ஏற்பாட்டில், சிங்கள இளைஞர்களுக்கான ஆளுமை விருத்தி மற்றும் மனித உரிமைகள் தொடர்பான பயிற்சி நிகழ்வொன்று செவ்வாயன்று (04) பொலன்னறுவை மாவட்டத்தில் இடம் பெற்றது.

பொலனறுவை மாவட்ட இளைஞர் சேவை மன்றத்தின் ஒத்துழைப்புடன், பொலன்னறுவை தம்மன்கடுவ பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் இப்பிரதேசத்தைச் சேர்ந்த 35 சிங்கள இளைஞர்கள், யுவதிகள் பங்குபற்றினர்.

திருகோணமலையில் பிரதான அலுவலகத்தைக் கொண்டு, கிழக்கு மாகாணத்தில் பணியாற்றும் அகம் நிறுவனம் தனது சேவைகளை, அனைத்து மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கும் நோக்குடன், முதல் கட்டமாக பொலன்னறுவை மாவட்ட இளைஞர்களுக்கு இந்த பயிற்சியை ஆரம்பித்தது.

நிகழ்வில் அகம் நிறுவனத்தின் இணைப்பாளர், பிரதி இணைப்பாளர் மற்றும் உத்தியோகத்தர்களும், இளைஞர் சேவை மன்றத்தின் இணைப்பாளர் மற்றும் மாவட்ட இளைஞர் சேவைகள் உத்தியோகத்தரும், கிழக்கு மாகாண மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் இசைதீன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.






# திருமலையில் தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கு வழிகாட்டி நூல்கள்

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டத்தில் இருந்து ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் தேர்வுக்குத் தோற்றும் மாணவர்களது பெறுபேறுகளை உயர்த்தும் நோக்கோடு மூதூர் கோட்டத்தில் உள்ள பாட்டாளிபுரம், நீலாங்கேணி, இளக்கந்தை, நல்லூர் ஆகிய பின்தங்கிய ஊர்களில் அமைந்துள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்குத் தலா 1930 பெறுமதியான புலமைப்பரிசில் தேர்வு வழிகாட்டி நூல்கள் நேற்று (06) திருக்கோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத்தால் வழங்கப்பட்டன.

இந்த நூல்களைத் திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவர் கதிரவேலு சண்முகம் குகதாசன், செயலாளர் கணபதிப்பிள்ளை சிவானந்தன், பொருளாளர் இராசரத்தினம் கோகுலதாசன் ஆகியோர் வழங்கி வைத்தனர்.

இதில் ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





# களுவாஞ்சிக்குடி ஆஸ்பத்திரிக்கு தளபாடங்கள் வழங்கி வைப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலைக்கு, லண்டன் வோள் தஸ்ரோ கற்பக விநாயகர் ஆலய நிதி அனுசரணையில் தளபாடங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

வைத்தியசாலையில் 14 நோயாளர் விடுதிகளுக்கும் உணவருந்துவதற்கான மேசை, கதிரைகள் வழங்கப்பட்டன.

அகிலன் பவுண்டேசனால் இவை வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் வைத்திசாலை வைத்திய அத்தியட்சகர், தாதி உத்தியோஸ்தர்கள், ஊழிர்கள் ஆகியோரிடம் அகிலன் பவுண்டேசன் இலங்கைக்கான இணைப்பாளர் திடீர் மரண விசாரணை அதிகாரி கலாநிதி வீ. ஆர்.மகேந்திரனால் கையளிக்கப்பட்டன.



# மாற்றுத் திறனாளிகளுக்கு இலவச மருத்துவ முகாம்

**(ஹஸ்பர்)**

தம்பலகாமம் பிரதேச செயலர் பிரிவில் மாற்றுத் திறனாளிகளுக்கான இலவச ஆயுள்வேத மருத்துவ முகாம் ஒன்று நேற்று (06) தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி வழிகாட்டுதலுக்கிணங்க இடம்பெற்ற மருத்துவ முகாமானது கப்பல் துறை ஆயுள்வேத தள வைத்திய சாலையுடன் தம்பலகாமம் பிரதேச செயலகமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தது.

மருதம் மாற்றுத் திறனாளிகள் சங்கம் மற்றும் எகமுத்து ஆகிய மாற்றுத் திறனாளிகள் சங்கத்தை சேர்ந்த உடல் ரீதியாக பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் இதில் கலந்து கொண்டனர்.

இதில் பல வைத்திய ஆலோசனைகள் வழங்கப்பட்டன. வைத்திய சேவைகளும் சிறப்பாக இடம்பெற்றன.

இதில் கப்பல் துறை ஆயுள்வேத தளவைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் ஏ.ஏ.அனஸ்டீன், வைத்தியர்கள், சமூக சேவைகள் உத்தியோகத்தர், சமூக சேவைகள் திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# போதை எதிர்ப்பு வாரத்தை முன்னிட்டு அக்கரைப்பற்றில் கொடிவாரம் ஆரம்பிப்பு

(றிஸ்வான் சாலிஹூ)

தேசிய போதை எதிர்ப்பு வாரத்தை முன்னிட்டு அக்கரைப்பற்று பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி திணைக் களத்தின் ஏற்பாட்டில் "நண்பா போதைப் புகைத்தலுக்கு முற்றுப்புள்ளி வைப் போம், வலுவான தேசம் ஒன்றை நித மும் கட்டியெழுப்புவோம்" எனும் தொனிப்பொருளில் கொடி தின அங்கு ரார்ப்பண நிகழ்வு திங்கட்கிழமை அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.எம்.அன்ஸார் தலைமையில், அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.



கொடி தினத்தை ஆரம்பித்து வைக் கும் வகையில் முதலாவது கொடியை அக்கரைப்பற்றுப் பிரதேச செயலாளர் ரீ.எம்.எம். அன்ஸாருக்கு சமுர்த்தி அபி விருத்தி உத்தியோகத்தர்களால் கொடி அணிவித்து ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சமுர்த்தி சங்கங்களின் அங்கத்தவர்கள், பொது மக்கள் ஆகியோருக்கு தேசிய போதை எதிர்ப்பு கொடி விற்பனை செய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் அக்கரைப்பற்று பிரதேச செயலக உதவிப் பிரதேச செய லாளர் றாசீத் யஹ்யா, கணக்காளர் அப்துல் றஹ்மான், சமுர்த்தி அபிவி ருத்தி திணைக்கள தலைமைப்பீட அதி காரிகள், சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு உறுப் பினர்கள், பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# கதிர்காமத்துக்கான காட்டுப்பாதை ஜூன் 30ஆம் திகதி திறக்கப்படும்!

## உகந்தையில் இன்று தீர்மானம்!!

(வி.ரி.சகாதேவராஜா, வடிவேல் டினேஸ்)

வரலாற்றுப் பிரசித்திபெற்ற கதிர்காம ஆடிவேல் விழாவுக்குச் செல்லும் பாதயாத்திரிகர்களுக்கான காட்டுப் பாதை எதிர்வரும் 30 ஆம் திகதி திறக்கப்படும். மீண்டும் அது ஜூலை 11 ஆம் திகதி மூடப்படும்.

முன்னர் இந்தப் பாதை ஜூலை முதலாம் திகதி திறக்கப்படும் என மொனராகலையில் தீர்மானிக்கப் பட்டிருந்தது.

காரைதீவு முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், உதவிக் கல்விப் பணிப்பாளர் விரி.சகாதேவராஜா ஆகியோர் சபையில் எழுந்து இந்தக் காலம் போதாது அது ஒருநாள் முந்தி மாற்றப்படவேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர்.

அதன் பலனாக இரு மாவட்ட அரச அதிபர்களும் கலந்துரையாடி இந்தத் திகதி 30 ஆம் திகதியாக மாற்றப்பட்டது.

இன்று (07) வெள்ளிக்கிழமை உகந்த மலை முருகன் ஆலயத்தின் காரைதீவு மடத்தில் அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேவிக்ரம தலைமையில் இடம்பெற்ற



கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

உகந்தமலை முருகனாலய வருடாந்த ஆடிவேல் விழா மற்றும் காட்டுப் பாதை திறப்பு தொடர்பிலான முன்னோடிக் கூட்டம் இன்று (07) பகல் உகந்தை முருகன் ஆலய வளாகத்தில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் சிவ.ஜெகராஜன், பிரதேச செயலாளர்கள், படை அதிகாரிகள், மதப் பெரியார்கள், திணைக்களத் தலைவர்கள், அமைப்புக்களின் பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர்.



# வேப்பையடி கலைமகள் வித்தியாலயத்துக்கு 40 லட்சம் ரூபா செலவில் புதிய ஸ்மார்ட் கூடம்

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

சம்மாந்துறை கல்வி வலயத்துக்கு உட்பட்ட நாவிதன்வெளி வேப்பையடி கலைமகள் வித்தியாலயத்தில் புதிய ஸ்மார்ட் கணனி ஆய்வு கூடத்தை திறந்து வைக்கும் நிகழ்வு பாடசாலை யின் அதிபர் கே.தியாகராஜா தலை மையில் இன்று (07) நடைபெற்றது.

இலங்கை Citizens Development Business Finance நிறுவனம் வசதி குறைந்த பாடசாலை மாணவர்களின் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தும் நோக்கில் முன்னெடுத்துவரும் வேலை திட்டத்தின் கீழ் 40 லட்சம் ரூபா செல வில் மாணவர்களுக்கான இந்தக் கணனிஆய்வுகூடம்கையளிக்கப்பட்டது.

இதில் CDB நிறுவனத்தின் முகா மைத்துவ பணிப்பாளர் மகேஷ் நாண யக்கார பிரதம அதிதியாக கலந்து கொண்டு கணினி ஆய்வு கூடத்தை திறந்து வைத்தார்.




இந்த நிகழ்வில் சம்மாந்துறை வலயக் கல்வி அலுவலகத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி.ஏ.சி.என். நிலோபா, பிரதி கல்வி பணிப்பாளரும் நாவிதன்வெளி கோட்டக் கல்வி பணிப் பாளருமான பி.பரமதயாளன், பிரதி கல்வி பணிப்பாளர்களான ஏ.எம்.சியாத், என்.எம். நாஸிர் அலி, வேப்பையடி இராணுவ முகாம் பொறுப்பதிகாரி ஆர். ரணவீர உட்பட கல்வி அதிகாரிகள், சி. டி. பி. நிறுவனத்தின் உயர் அதிகாரிகள், பாடசாலையின் அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள், நலன் விரும்பிகள் என பலரும் இதில் கலந்து கொண்டனர்.

# சதாவதானி கதிரைவேற்பிள்ளையின் 117ஆவது ஆண்டு நினைவு விழா

மேலைப் புலோலி சதாவதானி நா. கதிரைவேற்பிள்ளையின் 117ஆவது ஆண்டு நினைவு விழா நாளை (08) சனிக்கிழமை மாலை 5மணிக்கு சதாவதானி சனசமூக நிலைய முன்ற லில் அமைந்துள்ள சதாவதானி அரங் கில் நிலையத் தலைவர் அ. ஜெய நிமலன் தலைமையில் நடைபெற வுள்ளது

நிகழ்வில் பிரதமவிருந்தினராக செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக அகில இலங்கை இளங்கோ கழக அமைப்பாளர் பரா ரதீஸ்ம், கௌரவ விருந்தினர்களாக நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், சதாவதானி சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் நா சத்தி யநாதன் ஆகியோரும் கலந்து கொள்வர்.



# நாடாளுமன்ற குழுவின் தலைவராக மோடியை தேர்வு செய்தது தேசிய ஜனநாயகக் கூட்டணி!

புதுடெல்லி,ஜூன்07

இந்தியப் பொதுத் தேர்தலில் வென்ற தேசிய ஜனநாயகக் கூட்டணியின் நாடாளுமன்ற குழுத் தலைவராக நரேந்திர மோடி ஒருமனதாக தேர்வுசெய்யப்பட்டார்.

தேசிய ஜனநாயகக் கூட்டணி எம்.பி.க்கள், கட்சித் தலைவர்களின் ஆலோசனை கூட்டம் பழைய நாடாளுமன்ற வளாகத்தில் இன்று காலை தொடங்கி நடைபெற்றது. இதில் அமித்ஷா, ஜே.பி.நட்டா, ராஜ்நாத்சிங் உள்ளிட்ட பா.ஜ.க. மூத்த தலைவர்களும், சந்திரபாபு நாயுடு, நிதீஷ்குமார், ஏக்நாத் ஷிண்டே உள்ளிட்ட கூட்டணிக் கட்சி தலைவர்களும் பங்கேற் றனர்.

கூட்டணிக் கூட்டத்தில் பங்கேற்க வந்த மோடிக்கு அனைவரும் எழுந்து நின்று கைதட்டி வரவேற்பளித்தனர். மோடியை பா.ஜ.க. தேசியத் தலைவர் ஜே.பி.நட்டா வரவேற்றார்.



கூட்டத்தின்போது பேசிய பா.ஜ.க. மூத்த தலைவர் ராஜ்நாத் சிங், பா.ஜ.க. நாடாளுமன்ற குழு மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணியின் தலைவராக மோடியின் பெயரை முன்மொழிந்தார். தேசிய ஜனநாயக கூட்டணியின் நாடாளுமன்ற குழு தலைவராக மோடியை தேர்வு செய்யும் தீர்மானத்தை அமித்ஷா வழிமொழிந்தார்.

இதையடுத்து சந்திரபாபு நாயுடு, நிதீஷ்குமார் உள்ளிட்ட கூட்டணி கட்சி தலைவர்கள் இதற்கு ஆதரவு தெரி வித்து பேசினர். இதனை தொடர்ந்து தேசிய ஜனநாயக கூட்டணியின் நாடாளுமன்ற குழு தலைவராக மோடி ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டார்.

பின்னர் அங்கு மோடி உரையாற்றினார்.

# அவதூறு வழக்கில் ராகுலுக்குப் பிணை

பெங்களூர்,ஜூன்07

நாற்பது சதவீத கமிஷன் குற்றச்சாட்டு தொடர்பான வழக்கில் ராகுல் காந்தி இன்று பெங்களூர் கோர்ட்டில் நேரில் ஆஜரானார். அவருக்குப் பிணை வழங்கப்பட்டது.

கர்நாடக சட்டசபைக்கு கடந்த ஆண்டு தேர்தல் நடைபெற்றது. அந்த தேர்தலில் காங்கிரஸ் தலைவர்கள் பா.ஜனதா அரசு மீது 40 சதவீத கமிஷன் குற்றச்சாட்டைக் கூறினர். இது தான் அவர்களின் பிரசாரத்தில் முக்கிய விஷயமாக இடம் பெற்றது. பா.ஜனதாவின் தோல்விக்கு இந்தக் குற்றச்சாட்டு முக்கியமான காரணமாக அமைந்தது.

இதுதொடர்பாக அகில இந்திய காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி, முதல்-மந்திரி சித்தராமையா, துணை முதல்-மந்திரி டி.கே.சிவக்குமார் ஆகியோர் மீது பெங்களூரு மாஜிஸ்திரேட்டு கோர்ட்டில் பா.ஜனதா வழக்கு தொடர்ந்துள்ளது.

இந்த வழக்கு விசாரணை கடைசியாக கடந்த முதலாம் திகதி நடைபெற்றது. அன்றைய தினம் முதல்-மந்திரி சித்தராமையா, ராகுல் காந்தி, டி.கே.சிவக்குமார் ஆகியோர் ஆஜராக வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டு இருந்தது. ஆனால் முதல்-மந்திரி சித்தராமையாவும், டி.கே.சிவக்குமாரும் நேரில் ஆஜரானார்கள். அவர்களுக்கு பிணை வழங்கப்பட்டது.



ராகுல் காந்தி சார்பில் ஆஜரான சட்டத்தரணி, அவர் நேரில் ஆஜராக தவணை கேட்டார். இதையடுத்து 7 ஆம் திகதி (இன்று) நேரில் ஆஜராகும்படி ராகுல் காந்திக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

இந்நிலையில், ராகுல் காந்தி பெங்களூர் மன்றில் நேரில் ஆஜரானார். இதையடுத்து அவருக்குப் பிணை வழங்கப்பட்டது. இதற்காக அவர் டெல்லியில் இருந்து தனி விமானம் மூலம் இன்று காலை பெங்களூர் வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# விநாயகர் சிலை, பகவத் கீதையுடன் விண்வெளியில் சுனிதா வில்லியம்ஸ்

## சர்வதேச ஆய்வு மையத்தைச் சென்றடைந்தார்

வொஷிங்டன்,ஜூன்7

சுனிதா வில்லியம்ஸ் சர்வதேச விண்வெளி மையத்தை சென்றடைந்ததும், மகிழ்ச்சியில் நடனமாடும் வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது.

அமெரிக்காவில் வசித்து வரும் இந்திய வம்சாவளியை சேர்ந்த விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ். 58 வயதான சுனிதா ஏற்கனவே 2 முறை விண்வெளிக்குப் பயணம் செய்துள்ளார்.




இந்த நிலையில் சுனிதா வில்லியம்ஸ் 3 ஆவது முறையாக நேற்று முன்தினம் விண்வெளிக்குச் சென்றார். பிரபல விமான தயாரிப்பு நிறுவனமான 'போயிங்'-ன் 'ஸ்டார்லைனர்' விண்கலத்தில் சுனிதா வில்லியம்ஸ் விண்வெளிக்கு பறந்தார். அவருடன் அமெரிக்க விண்வெளி வீரரான புட்ச் வில்மோரும் சென்றார

தொழில்நுட்பக் கோளாறு காரணமாக பல முறை ஒத்திவைக்கப்பட்ட நிலையில், போயிங் நிறுவனத்தின் 'ஸ்டார்லைனர்' விண்கலம், அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தின் கென்னடி விண்வெளி மையத்தில் இருந்து நேற்றுமுன்தினம் வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்தது.

இந்தநிலையில், 25 மணி நேர பயணத்திற்குப் பிறகு சுனிதா வில்லியம்ஸ் வெற்றிகரமாக 3 ஆவது முறையாக சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தைச் சென்றடைந்தார். இந்திய நேரப்படி நள்ளிரவு 12 மணி அளவில் சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்திற்கு வீரர்கள் சென்றனர். சுமார் ஒரு வாரம் சர்வதேச விண்வெளி நிலையத்தில் தங்கி ஆய்வு மேற்கொண்டு ஜூன் 14 ஆம் திகதி பூமிக்கு திரும்புகிறார்கள்.

3 ஆவது முறையாக சர்வதேச விண்வெளி மையத்திற்குச் சென்றுள்ள சுனிதா, தன்னுடன் விநாயகர் சிலை மற்றும் பகவத் கீதையை கொண்டு சென்றுள்ளார்.

சர்வதேச விமான நிலையத்தை சென்றடைந்ததுமே மிகுந்த மகிழ்ச்சியடைந்த சுனிதா வில்லியம்ஸ், அங்கு நடனமாடிய வீடியோ தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது. அதன்படி, சர்வதேச விண்வெளி நிலையத்தின் பாரம்பரிய முறைப்படி மணி அடித்து, சுனிதா வில்லியம்ஸ் வரவேற்கப்பட்டுள்ளார். பயணம் வெற்றியடைந்ததை குறிப்பிட்டு கூக் குரலிட்டவாறு உள்ளே வந்த அவர், நடனமாடியபடியே அங்கிருந்த சக ஆராய்சியாளர்களை கட்டியணைத்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார். தொடர்ந்து அந்தரத்தில் மிதந்தபடியே மீண்டும் நடனமாடி உற்சாகமடைந்துள்ளார்.

குஜராத்தை சேர்ந்த தீபக், சுலோவேனியாவை சேர்ந்த போனி பாண்ட்யா தம்பதிக்கு மகளாக அமெரிக்காவின் ஓகியோ மாகாணத்தில் பிறந்தவர் சுனிதா வில்லியம்ஸ். அமெரிக்க கப்பல் படை விமானியான இவர் கடந்த 2006 ஆம் ஆண்டில் நாசா மூலம் முதல்முறை தனது விண்வெளி பயணத்தை மேற்கொண்டார். அதனை அடுத்து 2012-ம் ஆண்டில் 2 ஆம் முறையாக விண்ணை தொட்டார். இதுவரை 322 நாட்களை அவர் விண்ணில் கழித்திருக்கிறார். அது மட்டுமின்றி விண்ணில் நெடுநேரம் நடைபயின்ற முதல் பெண் என்ற சாதனைக்கும் சொந்தக்காரர். 7 முறை விண்வெளியில் நடைபயின்ற சுனிதா மொத்தம் 50 மணி நேரம் 40 நிமிடங்கள் விண்வெளியில் நடந்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஒரே நாளில் நூறு பேர் சூடான் மோதலில் பலி?

## இராணுவம் - துணை இராணுவம் சண்டை

சூடானில் இராணுவம் மற்றும் துணை இராணுவப் படைகளிடையே நடந்து வரும் மோதலில் நேற்று நூறுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான சூடானில் ஆர்.எஸ்.எவ். துணை இராணுவப் படைகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையே சுமார் ஓர் ஆண்டுக்கும் மேலாக மோதல் நீடித்து வருகிறது. இந்த மோதலில் இதுவரை சுமார் 14 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். மேலும் ஆயிரக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர்.

இந்நிலையில் சூடானின் கெசிரா மாகாணத்தில் உள்ள வாத் அல்-நவுரா என்ற கிராமத்திற்குள் நேற்று ஆர்.எஸ்.எவ். துணை இராணுவ படையினர் புகுந்து தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்த தாக்குதலில் பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியவர்கள் உள்பட 100-க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது. இந்த தாக்குதலுக்கு சூடான் அரசு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.



அதே சமயம் சூடான் இராணுவத்தினர் தங்கள் படைகளை தாக்க திட்டமிட்டனர் எனவும், அதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் வாத் அல்-நவுரா கிராமத்தின் வடக்கு, மேற்கு மற்றும் தெற்கு பகுதிகளில் உள்ளிராணுவ படைத்தளங்கள் மீது தாங்கள் தாக்குதல் நடத்தினர் எனவும் ஆர்.எஸ்.எவ். துணை இராணுவப் படை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

கனடா முரசு

பக்கங்கள் - 4

வெள்ளிக்கிழமை 07/06/2024

## ரெக்ஸ்டேல் சூட்டில் மற்றொருவர் மரணம்

ஒன்ராரியோ, ஜூன் 07

ரெக்ஸ்டேல் நகரில் இந்த வார ஆரம்பத்தில் நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்த ஒருவர் மரணமடைந்துள்ளார். C2 ▶

# டொராண்டோ போக்குவரத்துப் பணியாளர்கள் இன்று வேலைநிறுத்தத்தில் குதிக்கத் தயாராம்!

ஒன்ராரியோ, ஜூன் 7

ஆயிரக்கணக்கான டொராண்டோ போக்குவரத்துத் தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கத்தின் தலைவர், இன்று வெள்ளிக்கிழமை வேலை நிறுத்தத்திற்குத் தயாராக தாங்கள் இருக்கின்றனர் எனத் தெரிவித்துள்ளார்.

டொராண்டோ போக்குவரத்து ஆணைக்குழு பேச்சுவார்த்தையில், தமது கோரிக்கைகளை நிறைவேற்றவில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.


ரி.ரி.சி மற்றும் கூட்டிணைக்கப்பட்ட போக்குவரத்துத் தொழிற்சங்கம் என்பன புதிய ஒப்பந்தம் ஒன்றை

அடையத் தவறினால், டொராண்டோவிற்கு உள்ளேயும் வெளியேயும் பயணிப்பவர்களுக்கான பயணத் திட்டங்களை அது பாதிக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



# ஒன்ராரியோ மாகாணத்தில் அமைச்சரவையில் மாற்றம்

## விஜய் தணிகாசலம் இணை வீடமைப்பு அமைச்சரானார்



ஒன்ராரியோ, ஜூன் 07

ஒன்ராரியோ மாகாணத்தின் இணைப் போக்குவரத்து அமைச்சராக இருந்த விஜய் தணிகாசலம் இணை வீடமைப்பு அமைச்சராக பதவி மாற்றப்பட்டுள்ளார்.

ஒன்ராரியோ முதல்வர் டக் ஃபோர்ட் அமைச்சரவையில் ஜூன் 6ஆம் திகதி பெரும் மாற்றத்தை அறிவித்தார்.

இந்த அறிவித்தலில் மொத்தம் 35 அமைச்சர்கள் துணை அமைச்சர்கள் நியமிக்கப்பட்டனர்.

இவர்களில் 16 பேர் வேறு அமைச்சுப்பதவிக்கு மாற்றப்பட்டனர் அல்லது புதிதாக அமைச்சு பதவியில் நியமிக்கப்பட்டனர்.

சட்டமன்றம் நீட்டிக்கப்பட்ட கோடை விடுமுறைக்காக ஒன்றுகூடிய போது அறிவிக்கப்பட்ட இந்த திடீர் அமைச்சரவை மாற்றம் முன் கூட்டிய தேர்தல் குறித்த ஊகங்களை தூண்டியுள்ளது.

# கனடாவில் எகிறும் வீட்டு வாடகை

கனடாவில் வீட்டு வாடகை தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கனடாவில் மே மாத வீட்டு வாடகை தொகை இப்போது சராசரியாக 2,202 டொலர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது இந்த ஆண்டில் வாடகை தொகை 9.3 வீதமாக அதிகரித்துள்ளது.

இது கடந்த ஏப்ரல் மாதத்துடன் ஒப்பிடும்போது 0.6 வீத அதிகரிப்பை இது பதிவு செய்துள்ளது.

நாட்டின் அநேகமான பகுதிகளில் வாடகைத் தொகை உயர்வடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. C2 ▶



# படுகொலையுண்ட இஸ்லாமியக் குடும்பத்தை நினைவு கூர்ந்தார் கனடியப் பிரதமர் ட்ரூடோ



2021ஆம் ஆண்டில் பயங்கரவாத தாக்குதல் கொல்லப்பட்ட இஸ்லாமிய குடும்பத்தை கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ நினைவு கூர்ந்தார்.

கனடாவின் டொரோண்டோவின் தென்மேற்கே உள்ள சிறிய நகரமான லண்டனில், கடந்த 2021ஆம் ஆண்டு சாலையில் நடந்த சென்ற பாகிஸ்தானிய வம்சாவளி குடும்பத்தினர் பயங்கரவாத தாக்குதலுக்கு ஆளாகினர்.

அவர்கள் மீது லொறி ஒன்று மோதியதில் சல்மான் அஃப்ஸால் (46), மதிஹா (44), மகள் யும்னா (15) மற்றும் சல்மானின் தாயார் தலாத் (74) ஆகியோர் கொல்லப்பட்டனர்.

குடும்பத்தில் 9 வயது மகன் மட்டுமே அதிர்ஷ்டவசமாக உயிர் பிழைத்தார். இச்சம்பவம் தொடர்பில் லொறி ஓட்டுநர் நதானியேல் வெல்ட் மேனுக்கு கொலை குற்றத்திற்காக 4 ஆயுள் தண்டனைகளும், சிறுவனை கொலை செய்ய முயன்றமைக்காக மற்றொரு ஆயுள் தண்டனையும் விதிக்கப்பட்டன.

இந்த நிலையில் கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ இந்தத் துன்பியல் நிகழ்வை நினைவுகூர்ந்தார். வேதனை நிறைந்த நினைவு ஆண்டு என அவர் குறிப்பிட்டார்.

மேலும் அவரது எக்ஸ் பக்கத்தில், "மூன்று ஆண்டுகளுக்கு முன்பு தலாத், சல்மான், மதிஹா மற்றும் யும்னா அஃப்ஸால் ஆகியோர் கொல்லப்பட்டனர். கோழைத்தனமான பயங்கரவாத தாக்குதலால் 3 தலைமுறைகள் கொல்லப்பட்டு ஒரு சிறுவன் ஆதரவற்றவன் ஆனான். இந்த வேதனையான ஆண்டு நிறைவில் நம் லண்டன் குடும்பத்தை நினைவு கூருகிறோம். இஸ்லாமிய எதிர்ப்பு கொல்லும் என்பதை நாம் நினைவில் கொள்கிறோம். எங்கு, எப்போது பார்த்தாலும் அதை எதிர்த்துப் போராடுவது ஒவ்வொரு கனேடியனுக்கும் உள்ளது" என தெரிவித்துள்ளார்.

# மூன்று யுவதிகளின் மீது பாலியல் துன்புறுத்தல்
# டாக்ஸிச் சாரதிக்கு ஐந்தரை ஆண்டுகள் சிறை

கனடாவில் மூன்று பெண்களை பாலியல் ரீதியாக துன்புறுத்திய டாக்ஸி சாரதி ஒருவருக்கு ஐந்தரை ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ரொறன்ரோவைச் சேர்ந்த சாரதியான 38 வயதான தானீம் அஸீஸ் என்பவருக்கே இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

டாக்ஸியில் வைத்து இவ்வாறு பெண்களை பாலியல் ரீதியாக இந்த நபர் துன்புறுத்தியுள்ளார்.

ஒன்றாரியோவின் உச்ச நீதிமன்றினால் இந்தத் தண்டனை



விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2018 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் மூன்று வெவ்வேறு சந்தர்ப்பங்களில் இந்தப் பாலியல் வன்கொடுமைகள் இடம்பெற்றுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நள்ளிரவில் தனியாக வீடுகளுக்கு செல்வதற்காக டாக்ஸியில் பயணித்த இளம் பெண்களே இவ்வாறு துன்புறுத்தப்பட்டுள்ளனர்.

இந்த பாலியல் தாக்குதல்களினால் குறித்த இளம் பெண்கள் உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

**ரெக்ஸ்டேல் சூட்டில்...**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

ரெக்ஸ்டேல் நகரில் நோர்த் எல்பியன் உயர்நிலைப் பாடசாலை வாகன நிறுத்துமிடத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் பலியானார். நால்வர் காயமடைந்தனர்.

இவர்களில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர்களில் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்பதை டொரன்டோ பொலிஸார் உறுதிப் படுத்தியுள்ளனர்.

எனினும், பலியான இரண்டாவது நபரின் அடையாளத்தை பொலிஸார் வெளியிடவில்லை.

ஆனாலும் இவர் 46 வயதான ~~செய்முவர் கிப்ஸ் என குடும்பத்தினர்~~ உறுதிப்படுத்தியுள்ளனர்.

சம்பவ தினத்தன்று 61 வயதான டெல்ரோய் பார்க்ஸ் இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்து மரணமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

**கனடாவில் எகிறும்...**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

கனடாவின் முன்னணி வீட்டுமனை இணைய தளங்களில் ஒன்றான Rentals.ca நிறுவனம் அண்மையில் மேற்கொண்ட ஆய்வு ஒன்றின் மூலம் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

கனடாவில் சராசரி வாடகை தொகை முதல் தடவையாக 2,200 டொலர்களை தாண்டி உள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஒரு படுக்கையறையை கொண்ட வீடு ஒன்றின் வாடகை தொகை சராசரியாக 1,927 டொலர்கள் எனவும் இரண்டு படுக்கை அறைகளைக் கொண்ட வீடு ஒன்றின் வாடகை தொகை 2,334 டலர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சஸ்கட்ச்வான் மாகாணத்தில் வாடகை தொகை 21.4 வீதமாக அதிகரித்துள்ளது.




# நீராவி இன்ஜின் ரயிலில் அடிபட்டு இளம்பெண் அந்த நொடியே பலி!

கனடாவின் கல்கரியிலிருந்து புறப்பட்ட நீராவி இன்ஜின் ரயிலில் மோதுண்டு மெக்சிகோவில் பெண் ஒருவர் பலியானார்.

மெக்சிகோ ஹிடால்கோ பகுதியில் 1930 இல் உருவாக்கப்பட்ட நீராவி இன்ஜின் ரயிலின் நுழைவை ஷெல்பி எடுப்பதற்காகச் சென்ற இளம்பெண்ணின் தலையில் ரயிலின் எஞ்சின் மோதியதில், பலத்த காயமடைந்த பெண் அடிபட்ட நொடியிலேயே உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் கூறப்படுதாவது:-

கனடிய பசிபிக் கன்சாஸ் சிட்டியை (CPKC) உருவாக்கிய நட்பு இணைப்பைக் கொண்டாடுவதற்காக - 1930ஆம் ஆண்டில் உருவாக்கிய நீராவி இன்ஜின் ரயில் கடந்த ஏப்ரல் மாதம் கல்கரியில் இருந்து புறப்பட்டு, அமெரிக்காவின் கனடா வழியாக மெக்சிகோ சென்றடைய பயணத்தை ஆரம்பித்துள்ளது.

இந்த நிலையில் இன்று மெக்சிக்கோவில் தனது பயணத்தை முடித்து பின்னர், ஜூலை மாதம் கனடா திரும்பிய அங்கேயே அந்த ரயில் ஓய்வு பெறுகிற நிலையில், அது மெக்சிகோவுக்குள் நுழைந்ததும் அதைப் படம் எடுக்க ஹிடால்கோ பகுதி அருகே ஏராளமானோர் திரண்டனர்.

அப்போது, தன் மகனுடன் வந்திருந்த இளம்பெண் ஒருவர் பேரரசி ரயில் முன்பு ஷெல்பி எடுக்கத் தனது செல்போனை எடுத்தார். ரயில் அருகே வரும்போது, தண்டவாளம் அருகே சென்ற இளம்பெண் செல்போனுடன் முட்டிபோட்டு அமர்ந்தார்.

அப்போது, ரயிலின் எஞ்சின் இளம் பெண்ணின் தலையில் மோதியது. இதில், பலத்த காயமடைந்த பெண் அடிபட்ட நொடியிலேயே உயிரிழந்தார்.

# நோர்மண்டியில் துருப்புகள் தரையிறக்கத்தின் 80 ஆவது ஆண்டு நிகழ்வில் கனடா பிரதமரும்





ஒன்ராரியோ, ஜூன் 07

நோர்மண்டி ஜூனோ கடற்கரையில் கனடியர்களும் டி-டேயின் 80 வது ஆண்டு நிறைவைக் குறித்தனர்.

ஜூன் ஆறாம் திகதி, வியாழக்கிழமை காலை நடைபெற்ற இந்த நிகழ்வில் கனடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மற்றும் பிரான்ஸ் பிரதமர் கேப்ரியல் அட்டால் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பல தசாப்தங்களுக்கு முன்னர் இதே கடற்கரையில் யுத்தத்தில் உயிர் பிழைத்த 13 கனடிய இராணுவ உறுப்பினர்களும் இராணுவ சீருடையில் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இவர்களில் 104 வயதான முன்னாள் கனடிய இராணுவ வீரர் ஒருவரும் அடங்குகிறார்.

ஆயிரக்கணக்கானவர்கள் இந்த நினைவு நிகழ்வில் பங்கேற்றனர்.

இரண்டாம் உலக மகா யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரக் காரணமாக அமைந்த கூட்டுப் படைகளின் ஒரு லட்சத்து 60 ஆயிரம் துருப்புகளின் தரையிறக்கம் கடும் யுத்தம், பெரும் மனித உயிரழுவுகளுக்கு மத்தியில் எண்பது ஆண்டுகளுக்கு முன்னர் இதே தினத்தில்தான் நோர்மண்டியில் ஜூன் 6 ஆம் திகதி ஆரம்பமானது.

# கூட்டுறவு வீட்டு மேம்பாட்டுத் திட்டம் அறிவிக்கப்பட்டபடி அறிமுகமாகும்!

## மத்திய அரசின் வீட்டுவசதி அமைச்சர் தெரிவிப்பு

ஒன்ராரியோ, ஜூன் 7

மத்திய அரசு 2022 பட்ஜெட்டில் உறுதியளித்த 1.5 பில்லியன் டொலர் கூட்டுறவு வீட்டு மேம்பாட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்தவுள்ளதாக வீட்டு வசதி அமைச்சர் சீன் ஃப்ரேசர் தெரிவித்துள்ளார்.

வின்னிபெக் நகரில் இந்தத் திட்டத்தை வீட்டுவசதி அமைச்சர் அறிவித்துள்ளார்.



இந்தத் திட்டம் 2028 ஆம் ஆண்டளவில் ஆயிரக்கணக்கான புதிய வீடுகளைக் நிர்மாணிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த திட்டம், இந்த வசந்த காலத்தில் வெளியிடப்பட்ட ஒரு திட்டத்தின் ஓர் அங்கமாகும், இது வீட்டு வசதியை சமாளிக்க மத்திய அரசின் திட்டங்களை கோடிட்டுக் காட்டுகிறது.

# மெக்கில் பல்கலையின் நிர்வாகக் கட்டடத்தை ஆக்கிரமித்த போராட்டக்காரர்கள் கலைப்பு!

## பொலிஸார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம்

கியூபெக், ஜூன் 07

மெக்கில் பல்கலைக்கழகத்தின் வளாகத்தில் உள்ள முக்கிய நிர்வாகக் கட்டடத்தை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆக்கிரமித்ததை அடுத்து, மொன்ரியலில் பொலிஸ் வலுக்கட்டாயமாக மெக்கில் பல்கலைக்கழக ஆர்ப்பாட்டக் காரரக்களை கலைத்துள்ளது.

கலவரத்தை அடக்கிய அதிகாரிகள் கண்ணீர் புகை பயன்படுத்தியுள்ளனர்.

பலஸ்தீன சார்பு எதிர்ப்பாளர்கள் ஏப்ரல் பிற்பகுதியில் இருந்து வளாகத்தின் கீழ் மைதானத்தில் முகாமிட்டுள்ளனர்.

பல்கலைக்கழகம் இஸ்ரேலின் இராணுவத்துடன் பிணைக்கப்பட்ட அதன் முதலீடுகளை நிறுத்த வேண்டும் எனவும், இஸ்ரேலிய கல்வி நிறுவனங்களுடனான உறவுகளைத் துண்டிக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரி வருகின்றனர்.



முகாமில் பங்கேற்ற மாணவர் குழுவான பலஸ்தீன மனித உரிமைகளுக்கான அமைப்பு மெக்கில் ஜேம்ஸ் நிர்வாக கட்டடத்தை ஆக்கிரமித்துள்ளது.

நிர்வாக கட்டிடத்திற்குள் எஞ்சியிருக்கும் எதிர்ப்பாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த முயற்சிப்பதாகவும், அதைத் தொடர்ந்து கைது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மொன்ரியல் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# மெக்மாஸ்டர் குழந்தைகள் மருத்துவமனையில் அறுவை சிகிச்சையின் பின் 2 குழந்தைகள் சாவு

ஒன்ராரியோ, ஜூன் 07

மெக்மாஸ்டர் குழந்தைகள் மருத்துவமனையில் இரண்டு குழந்தைகள் இறந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஹெமில்டன் நகரில் உள்ள மருத்துவமனையில் டொன்சில், அடினொய்ட் அறுவை சிகிச்சையின் பின்னர் இந்த குழந்தைகள் இறந்தன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அறுவை சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட இரண்டு குழந்தைகள் மருத்துவமனையை விட்டு வெளியேறிய பின்னர் இறந்துவிட்டன என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.



இந்தக் குழந்தைகளில் ஒன்று மே மாதத்திலும், மற்றைய குழந்தை இந்த மாதத்திலும் உயிரிழந்துள்ளன.

அறுவை சிகிச்சைக்கு மறுதினம் ஒரு குழந்தையும், அறுவை சிகிச்சைக்கு ஒன்பது நாளகளுக்கு பின்னர் இரண்டாவது குழந்தையும் இறந்துள்ளன.

இந்த மரணங்கள் குறித்த விரிவான மறு ஆய்வு முன்னெடுக்கப்படுகிறது.

இந்த நிலையில் 18 வயதிற்குட்பட்ட நோயாளிகளுக்கு திட்டமிடப்பட்ட இதுபோன்ற அறுவை சிகிச்சை நடைமுறைகளை மருத்துவமனை அடுத்த அறிவிப்பு வரை இடை நிறுத்தியுள்ளது.